# "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" அப் 1 : 4

**காத்திருங்கள்.**

இயேசு கிறிஸ்து பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும், அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக் குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகத் தெளிவான திருஷ்டாந்தங்கங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடிக்கிறவராகக் காண்பித்தார் அல்லவா ?

அப்பொழுது இயேசு கொடுத்த கட்டளைதான் **"காத்திருங்கள்"** என்பதாகும்.

எதற்காக இயேசு காத்திருக்கச் சொன்னார் ? **பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படியாக!**

என் அன்பு சகோதரனே, சகோதரியே, "நீங்களும் **காத்திருங்கள்**"

**ஏனெனில் நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். அல்லேலுயா!**

பரிசுத்த ஆவியை பெற வாஞ்சிக்கும் நண்பரே, தேவனுடைய பாதத்திலே காத்திருங்கள்.

தனிமையிலே தேவனோடு காத்திருங்கள். தனி அறைக்குள்ளே காத்திருங்கள்.

ஆவிக்குரிய பிள்ளைகளோடு காத்திருங்கள்.

பரிசுத்த ஆவி உண்டென்று நம்புகிறவர்களுடன் காத்திருங்கள். உங்கள் சபை போதகர் கற்பிக்கும் வேத வசனத்திற்குக் கீழ்ப்படிந்து காத்திருங்கள்.

வயதாகிவிட்டதே என்று நினைக்க வேண்டாம் ?
சிறு பிள்ளையே என்று நினைக்க வேண்டாம் ?
சபை சரியில்லையே என்று நினைக்க வேண்டாம் ?
நான் மாபெரும் பாவியே என்று அவிசுவாசம் வேண்டாம் ?
படிப்பு இல்லையே என்று நினைக்க வேண்டாம் ?
போதிய பரிசுத்தம் இல்லையே என்று நினைக்க வேண்டாம்.

**"காத்திருங்கள்"**

நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். – ஆமென்!

**இயேசு சொன்னார் . . .**பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்பொழுது, பரமபிதாவானவர் தம்மை வேண்டிக் கொள்கிறவர்களுக்கு **பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா ?**

**ஏன் பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும் ?**

1. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்பொழுது, நீங்கள் பெலனடைந்து . . . பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்.
    அ. பரிசுத்த ஆவியினாலே பெலன் கிடைக்கிறது.
    ஆ. பரிசுத்த ஆவியினாலே சாட்சிகளாக மாறுகிறோம்.
2. என் நாமத்தினாலே அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். யோவான் 14 : 26.
    அ. பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் போதிப்பார்.
    ஆ. எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார்.
    இ. சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்.

**பரிசுத்த ஆவியானவர் வேலை என்ன ? :** தேற்றரவாளன் உங்களிடத்தில் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துவார். **யோவா. 16 : 8**

அ. பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்துவார்.
ஆ. நீதியைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்.
இ. நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்.

**தீர்க்க தரிசனம் என்ன ? :** மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ் சொல்வார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். யோவே.2 28,29.

**எப்பொழுது நிறைவேறியது ? :** பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த இடம் முழுவதையும் நிரப்பிற்று. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.

இதை வாஞ்சையுடன் வாசிக்கும் அன்பரே,

**"நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" ஆமென்.**